உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - சித்தன்கேணி

# திருவம்பலம் இராமஜயம்


அவர்களின்

# நினைவு மலர்

17-09-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு திருவம்பலம் இராமஜயம்

தோற்றம்:- 14-02-1915 மறைவு:- 18-08-1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயக வணக்கம்

*திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்*
*கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்*
*பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்*
*பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்*

சிவபதமடைந்த

# திருவம்பலம் இராமஜயம் அவர்களது
# வாழ்க்கை வரலாறு

---

ஈழத்திருநாட்டின் இலங்கிடும் வடபாலின் வாழைகள் வளர்ந்து சோலைகள் நிறைந்து களனிகள் சூழ காட்சிக்கினியதாய்ச் சிறந்துளது சித்தன்கேணி. விநாயகனும் சிதம்பரேஸ்வரனும் அருள்பாலிக்க இப்பெரும்பதி பொற்புற விளங்குகின்றது. நாற்சந்தியும் நல்லோர் கூட்டமுங் கொண்டு நகர் போல்க் காட்சிதருகின்றது.

இவ்வூரில் புவிராஜசிங்க முதலியார் பரம்பரையில் தோன்றிய மாரிமுத்து பார்வதி தம்பதிகள் பதினறு பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தனர். பதினறு பிள்ளைகளின்கடைசிப்பிள்ளை திருவம்பலம், திருவம்பலச் சழுக்கம் படிக்கும்காலை பிறந்ததால் இவருக்கு திருவம்பலம் என்னும் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர்.

திருவம்பலம் படித்து முன்னேறிச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றித் தொல்புரம் நமசிவாயம் சின்னச்சிப் பிள்ளை தம்பதிகட்கு அருந்தவச் செல்வமாக விளங்கிய சிதம்பரத்தை மணம்புரிந்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவம்பலம் தம்பதிகட்குப் பிள்ளைச் செல்வமாக இரு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவர் சிவமயம் இளையவர் இராமஜயம். இரு பிள்ளைகளையும் பொன்போற்பேணி வளர்த்தனர். இவ்வேளை தகப்பனர் சிவபதமடைந்தார். தாயார் கல்விச் செல்வமெலாம் புகட்டிச் சிவமயத்திற்கு பார்வதியாரையும், இராமஜயத்திற்கு இரத்தினேஸ்வரியையும் திருமணம் செய்வித்து எல்லையிலா ஆனந்தத்தில் மூழ்கினர்.

இராமஜயம் 14-02-1915ம் ஆண்டு தொல்புரம் பதியிலே பிறந்தார். பொன்னிறம் படைத்த இராமஜயத்தைக் கண்டு பூரிப்படைந்தனர் பல்லோர். ஆரம்பக்கல்வியை மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் மேற்படிப்பினைச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றுவந்தார்.

மேற் கல்வியைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்புப் பயிராகிய தேயிலை தோட்டத்தில் உத்தியோகம் பார்ப்பதற்கு எண்ணம் கொண்டார். மலைகள் மலிந்த மடக்கம்பரைத் தோட்டத்தில் கடமையாற்றினர். வட்டகொடை மக்கள் எல்லாம் இவரது அன்பையும், பண்பையும் போற்றினர். கடமையே கருத்தாகக் கொண்டார். இவரது கடமையுணர்வை நோக்கிய டெஸ்போர்ட் (கிடுமட்டி) தோட்டத்தினரும் இவரினை தம் தோட்டத்திற்கு அழைத்தனர். டெஸ்போட் தோட்டத்தில் கடமையாற்றும் போது பொஸ்பார்ட் தோட்ட உரிமையாளரும் தொழிலதிபருமாகிய திரு A. துரைசாமி ரெட்டியாருடன் தொடர்புகள் ஏற்பட்டது. தொடர்ந்தும் இவரது சேவை மடக்கம்பரை தோட்டத்திற்கு தேவைப்பட்டதால் திரும்பவும் மடக்கம்பரைக்கு சேவைசெய்வதற்கு சென்றார்

அந்நாளில் திரு S. கிருஷ்ணசாமிரெட்டியார் இராமஜயம் அவர்களது உதவியுடன் கம்பளையில் அமைந்துள்ள புசத்தனைத் தோட்டத்தைச் சொந்தமாக வாங்கினர். திரு இராமஜயம் அவர்கள் மடக்கம்பரையில் சேவை செய்து கொண்டே புசத்தனைத் தோட்டத்து மேற்பார்வையையும் செய்து கொண்டு வந்தார் பின்பு மடக்கம்பரையில் ஓய்வுபெற்றுக் கொண்டு புசத்தனை தோட்டத்தைத் தன்பொறுப்பில் அதன் / அதனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வை நிர்வாகம் பாவற்றையும் ஏற்றுக்கொண்டு திறம்பட நடாத்தினர்.

நடாத்திவருங்காலே தன்வழித்தோன்றல் சி. ஸ்கந்தமயத்திடம் பொறுப்புக்களை ஒப்படைத்து மேற்பார்வை செய்து கொண்டு வந்தார்.

திரு இராமஜயம் அவர்கள் எந்தத் தேயிலைத் தோட்டத்தில் உத்தியோகம் பார்த்தாலும் பேரும் புகழும் சேர்ந்தவண்ணம் இருந்தன. இவரது புகழினைக் கேள்விப்பட்ட இராசேந்திரமுதலி (துரை அரசன் மரபு) பரம்பரையைச் சேர்ந்த இவரது தாய் மாமன் தொல்புரம் நமசிவாயம் கனகசபையும் பாரியாரும் தம் தவக்கொழுந்தாகிய இரத்தினேஸ்வரியைத் திரு இராமஜயம் அவர்களுக்குத் திருமணம் செய்துவைக்க நினைத்தனர் மலாயாநாட்டில் பிறந்த இரத்தினேஸ்வரியை கதிர்காமத்தலத்தில் கைப்பிடிக்கவைத்து மகிழ்ந்தனர் பெற்றோர்.

அன்றிலும் பெடையும் போல தம்பதிகள் மகிழ்ந்து வாழ்ந்தனர். புண்ணியஸ்தலங்களில் புனிதநீராடினர். மலாயா நாட்டிற்கும் மகிழ்வுற்றுச் சென்றனர். சிவதலங்கள் யாவும் சென்று திரும்பினர் பெருமக்களுடன் பெருமையாய் வாழ்ந்தனர். வாழும் காலை 18-8-82 அன்று (ஆவணி மாதம புதன்கிழமை பூஷநட்ஷத்திரத்தன்று 2-8-82) கூற்றுவன் வந்தான். கூடிக்குலாவி வாழ்ந்த தம்பதிகளில், இராமஜெயத்தின் மேல் கண்வைத்தான் கவர்ந்தான் அவருயிரை. சென்றான் சிவனிடம் கொடுத்தான் அவர் ஆத்மாவை.

சோடிழந்த அன்றில் போல் தோகை மயிலான் இரத்தினேஸ்வரி சோர்ந்து விழுந்தார்! அலறி அழுதார்! கண்ணீர் விட்டார்! கவலையால் வாடினர்! ஆற்றொணாத் துயரில் மூழ்கினார்!

உடன்பிறப்பாளர் திரு. சிவமயம் என்ன செய்வதென்று அறியாமல் ஐயோ! என்றார். என்தம்பியே என்று கூவினர்! உடன்பிறப்பே உன்னை என்று நான் காண்பேன்! விநாயகனை முருகனை, பலராமனை கிருஷ்ணனை. இராமனை இலட்சுமணனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டைப்புலவரை எண்ணுவதுபோல் எம்மை யெல்லாம் மற்றவர் எண்ணும்போது பெருமைப்படுவேனே! இன்று சகோதரத்தை இழந்து தனிமரம் ஆனேனே! என்செய்வேன்! என்று ஏங்கினர்.

தான் பெருவிட்டாலும் பெற்ற பிள்ளைகள் போல் பேணி வளர்த்த செல்வங்களான பெருமக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர் யாவரும் உருகி அழுதனர். என்செய்வது எல்லாம் விதிப்பயனே! இராமஜெயம் சிவமயமாகியது.

அமரத்துவமான திரு இராமஜெயம் அவர்கள் அளப்பரிய பணிகள் செய்தார் சமுகப்பணிகளாக மடக்கும்பரைத் தொழிலாளர்களுக்கு வேண்டியவுதவி செய்தார். தொழிலாளருக்குத் தொழிலாளராகவே இருந்தார். இலகிந் தெனிய மக்களுடன் விசுவாசமாக விளங்கினர். குணத்தாலே குன்று! பண்பிலே அன்பிலே வாரி வழங்குவதில் பாரி! இத்தகைய பெருமகன் இன்றில்லையே!

அன்னர் சமயப்பணியும் அளப்பரியது சித்தன்கேணி விநாயகன், சித்தன்கேணி சிதம்பரேஸ்வரன், வழக்கம்பரை அம்மன், கடத்துப் பிள்ளையார், அரையன்வளவு பிள்ளையார், புசத்தனே, கம்பளை ஆலயங்கள் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசன் யாவற்றுடனும் நெருங்கிய ஈடுபாடுண்டு. பலதிருப்பணி வேலைகளையும் மேற்கொண்டுள்ளார்! இறைவனுக்குப் பூமாலை சாத்துவித்துப் பாமாலையால் பாடிப் பரவுவார். அப்பெருந்தகை இன்றில்லை!

என்செய்வது ஆண்டவன் அழைத்திட்டான். அவர் போய்விட்டார். அங்கிருந்தே தன் அன்பர்களை பார்த்திடுவார். ஆதலால் ஆறுதல் அடைவோம்! ஆண்டவனைத் தொழுவோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இராமஜெயம்

சிவலோக பதவி எய்தியுள்ள திரு இராமஜெயம் அவர்களை எனக்கு 1936ம் ஆண்டு முதல் நன்கு தெரியும். எங்களது குடும்பத்தில் ஒருவராக மிகவும் அன்புடன் நேசித்து வந்தார்.

முதல் Dessford Group (டெஸ் போட்) தோட்டத்தில் வேலை செய்து பிறகு மடக்கொம்பரை தோட்டத்திற்கு மாற்றலாகி சென்றார். நாங்கள் பிரியமுடியாத நண்பர்களாகவே என்றும் இருந்தோம் 1947ல் அவருடைய விடாமுயற்சியினால் தற்சமயம் இருந்த புசத்தனை தோட்டத்தை வாங்கினோம் 1959லிருந்து மேற்படி தோட்டத்தை அவரிடம் ஒப்புவித்து நான் இந்தியா சென்று விட்டேன். அன்னாரின் விவாகத்தை செய்து முடிப்பதற்கு நானும் ஒருபொறுப்பாளியாய் இருந்தேன் பிறரிடம் எவ்வித உதவியும் எதிர்பாராதவர். தனது வாழ்நாள் முழுவதும் பிறருக்கே உதவி செய்ய வேண்டும் என்னும் சிறந்த மனமுள்ளவர். விடாமுயற்சியுடையவர்

அன்னாரது இழப்பு அம்மையார் திருமதி இராமஜெயம் அவர்களுக்கும், அண்ணா திரு ஓ. சிவசுயம் அவர்கள் குடும்பத்தார்க்கும் எனக்கும் எங்கள் குடும்பத்தவர்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பு

வாழ்க்கையில் ஏற்படக்கூடியஎல்லா நன்மை தீமைகளையும் எதிர்த்து போராடி வென்றவர். காலம் அவரை வாழ விடாது மறைவுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதை விட வேறு மார்க்கம் எதுவும் இல்லை.

நாமக்கல் தாலுகா
சேலம் மாவட்டம்
இந்தியா

நண்பன்
S. கிருஷ்ணசாமி ரெட்டியார்
இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட இராமஜெயம்

"ஞும் ரூம்" என்பது அருள்பெரும் மந்திரம். இதை உச்சரிப்போருக்கு சக்தியுண்டு, வெற்றியுண்டு. இக்கருத்தமையவே இராமஜெயம் என்னும் பெயர் அமைந்தது. இராமஜெயத்தின் அண்ணன் பெயர் சிவமயம். உலகமே சிவமயம். இப்பெயரை உச்சரித்தாலே அருமபெரும் பலன்களுண்டு.

சிவ சிவ என்றிட தீவினை மாளும்
சிவ சிவ என்றிட தேவருமாவர்
சிவ சிவ என்றிட சிவகதி தானே

இந்த அபூர்வ பெயர்களை இவர்களுக்கு சூட்டிய அன்னையும், தந்தையும் திரு, திருமதி. திருவம்பலம் ஆகியோரை என்னென்று நினைப்பது. இவர்கள் கடவுட்பற்று, சமயப் பற்றும் உடையவராய் வாழ்ந்தார்கள் என்பது அனுமானிக்கத் தக்கது. இந்த அரும்பெரும் பெயர்களுக்கேற்ப அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற ஔவை வாக்கிற்கிணங்க இவர்கள் அவர்களைப் போற்றி வாழ்ந்தார்கள். தாயிற்சிறந்த கோயிலுமில்லை என்ற வாக்கிற்கமைய தாயைப்பேணி அன்பு காட்டி அவர்களின் தள்ளாத வயதிலும் ஆதரித்து தந்தை, தாய் பேண் என்ற வகையில் பேணி நடந்தவர்கள்.

சிவமயமும், இராமஜெயமும் இராமர் இலட்சுமணர் போல் சகோதரத்துவம் பூண்டு வாழ்ந்தனர். ஈருடல் ஓருயிர் போல் ஒருவரை ஒருவர் நேசித்து இருந்தவர்கள். இவர்களின் சகோதரத்துவமும், அன்பும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ஆனால் விதியின் வழியால் தம்பியை இழந்த அண்ணர் இன்று தவிக்கின்றார். என்செய்வது விதைத்தவன் வெட்டுகின்றான் நம்மால் என்ன செய்யமுடியும்.

இராமஜெயம் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் செல்வத்திற்கழகு செழுங்கிளை தாங்குதல் என்ற ஔவை வாக்கிற்கிணங்க தனது சுற்றத்திற்கும், சூழலுக்கும், சமூகத்திற்கும் தன்னால் இயன்றளவு பொருளுதவி கொடுத்தும், சரீர உதவி கொடுத்தும வாழ்ந்தவர் யாரைக் கண்டாலும் இன்முகம் காட்டி இனியசொற் பேசி மகிழ்விக்கும் தன்மையவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்கேணியில் எழுந்தருளியிருக்கும் பெரியவளவில் பிள்ளையாருக்கும் மற்றும் கோயில்களுக்கும் தன்னால் இயன்ற காணிக்கைகள் கொடுத்து கடவுள்பற்றோடு வாழ்ந்து வந்தார் கோயிலுக்கு உண்டியல் போடுவதென்றால் கிள்ளிப்போடாது எண்ணிப்போடாது, அள்ளியேபோடுவார். இது அவரின் கடவுட் பற்றுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

இதுவும் ஓர் ஔவையாக்கு
அரியது கேட்கின் வரிவடிவேலோய் அரிது அரிது
மானிடராதலரிது.
மானிடராயினும் கூன், குருடு, செவிடு, பேடு
நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும் ஞானமும்
கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும் தானமும்
தவமும் தான் செய்தலரிது
தானமும், தவமும் தான் செய்வாராயின் வானவர் நாடு
வழி திறந்திடுமே.

இத்தியாதி அம்சங்கள் எல்லாம் பொருந்தி தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற வாக்கிற்கமைவாக இருந்தவர் இராமஜெயம் அவருக்கு 18-8-82ல் வானவர் நாடுவழி திறந்திருந்தது. அவர்கள் பூதவுடல் நீங்கி புகழுடம்பு பிறவி தேவர்கள் எல்லாம் வரவேற்க அங்கு சென்றுவிட்டார், அங்கும் ஓர் உன்னத ஸ்தானம் பெற்றிருப்பார் அவர் அங்கும் இருந்து கொண்டு இங்கு ஓர் கண்ணோட்டம் செய்து இங்கு உள்ளவர்களுக்கும் ஆசி கூறுவார்.

எனவே அவர் இறந்து விட்டார் என்ற கவலையை ஒழிக்க வேண்டும் ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் பிறந்தவர் யாவரும் இறப்பது திண்ணம் எனவே நாம் எல்லோரும் கவலையை மறந்து அவரின் ஆத்மசாந்திக்கு இறைவனை இறைஞ்சுவோமாக

வைத்தியகலாநிதி க. கெங்காதரம்பிள்ளை
சித்தன்கேணி

## M. N. Sambamurti & Co.

**Chartered Accountants**

**S. Coomaraswamy** B. Sc, (London) F. C. A.
**R. T. Sambanthar** F. C. A.
**N. Annamalai** B. A, (Madras) F C A,
**P Sathasivam** B. Sc. (ceylon) F. C. A.
**P. Gnanasivam** B com (Madras) F. C. A.
**E. Abeysiriwardane** B. A (ceylon) B. com. (ceylon) F. C. A.
**S. Selvendra** B. Sc. (Madras) F. C. A.
Shirani de silva F. C A
Selvi Balachandran F. C. A.

*Colombo. 3rd Sept. 1982*

# Late Mr. T. RAMAJAYAM

## Pussetenne Estate Gampola

The recent death of Mr T. Ramajayam was received with profound sorrow by Partners and Staff alike in our firm. Our association with him extended to over 30 years and his presence in our office from time to time was always a pleasant event as his smile was like the rays of the sun casting away all gloom. His attitude towardsall problems was one of unbounded optimism and faith in God. He was always willing to help any person in distress and very kind and benevolent to all.

Many of us have partaken of his Generous Hospitality when carrying out the audit of his Estate Accounts at Pussetenne and will not forget his infections humour, genial nature and vitality in the performance of his arduous duties on the Estate.

We will forever cherish our memories of him.
With affection and gratitude.

M. N. SAMBAMURTI & CO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட அதிபர்களில் முன்மாதிரியானவர்

தோட்ட அதிபராக வாழ்ந்து தொழிலாளர்களின் நன்மதிப்புக்கும், அன்புக்கும் உரியவராக திகழ்ந்த அமரர் திரு இராமஜெயம் அவர்கள் முப்பத்திநான்கு வருடங்களாக புசத்தன்னை தோட்டத்தின் அதிபராக கடமையாற்றி வந்துள்ளார் தோட்டத் தொழிலாளியிடம் பேதம் காட்டி வாழ்ந்தவரல்ல. தொழிலாளியோடு தொழிலாளியாக வாழ்ந்தவர். சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் நல்லெண்ணத்திற்கு உரியவராக வாழ்ந்தார் பொதுப் பணியில் தான் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் தன்னால் இயன்ற உதவியை வாரி வழங்கியுள்ளார். அது இப்பகுதி மக்களின் மனதில் என்றும் பசுமையாக நிறைந்திருக்கும்.

மனிதர்களுக்கு எத்தனையோபேர் உதவிசெய்யலாம் ஆனால் மனிதாபிமானத்துடன் இதயம் நிறைவுள்ள உதவியை அளிப்பதுதான் உண்மையானஉதவி. அத்தகைய மனப்பான்மையுடன் உதவுவதில் முன்னணி வகித்தவர் அமரர் திரு இராமஜெயம் அவர்கள். எத்தனையோ தோட்ட அதிபர்களையும் முதலாளிகளையும்நாம்சந்தித்துள்ளோம் அத்தனைபேருக்கும் முன்மாதிரியாக நடந்துகாட்டியவர் இவர். தொழிலாளர்களின் குற்றங்களை சுட்டிக்காட்டுவார். தொழிலாளி திருந்தி மனிதனாக வாழவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டவர்.

நிர்வாகத்தினரை நாம்பாராட்டுவதில்லை ஆனால் அமரர் திரு இராமஜெயம் நிர்வாகி என்பதோடு மாத்திரம் நிற்கவில்லை தொழிலாளியாகவும் தொழிலாளிக்குவரும் துன்பத்தை தனது துன்பமாக ஏற்றுக்கொள்வார். அந்தவகையில் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதை உணர்த்தவே அவரின் அந்தியேட்டி மலருக்கு இந்த சின்னச் செய்தியை மனநிறைவோடு தருகின்றேன். இவரின் மறைவு எம்மைப் போன்ற தொழிலாளருக்கு பேரிழப்பு. அதேபோன்று தோட்டச் சேவையாளர்களுக்கும் பேரிழப்பு என்றுதான்சொல்ல வேண்டும். எங்களின் மேன்மைக்கு உறுதுணையாக இருந்த அமரர் இராமஜெயம் அவர்களின் மறைவால் துயரத்தில் ஆழ்ந்துள்ள அன்னாரின் துணைவி, உறவினர்கள் தொழிலாளர்கள் நண்பர்கள் ஆகியோரோடு நானும் ஒருவனாக பங்குகொண்டு அவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

தொழிலாளர் தேசிய சங்கம்
618-3/3, காலி வீதி,
கொழும்பு 3

இங்ஙனம்
டி. ஐயாத்துரை
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரங்கற் பாக்கள்

—— × ——

திருவருள் பழுத்த திருவம் பலவேலன்
மருவியதம் மக்களுக்கு மாண்பு – பெருக
சிவமயம் ராமஜெயச் சீரார்ந்த பேர்கள்
தவமாக இட்டார் நயந்து

சீர்சித்தங் கேணிசெய் சித்த தவப்பயனாய்
கார்மிகர் ராமஜெயப் பேரோடு – சீர்மிகுமி
வாழ்ந்தவன் செய்யறம் வாழுமே யென்றென்றுந்
தாழ்வின்றி நின்று தழைத்து

அன்புறை யுள்ளம் அறம்பொதி மென்மொழி
துன்பந் துடைத்திடும் வள்ளன்மை – இன்றன்
இராம ஜெயாரமம் ஈடிலா தென்றும்
பராவிடும் பாரிற் பரந்து.

நற்றவர் போற்றி நவிலகற்று நல்லறம்
பொற்பார் இறைபணி பொங்கிடும் – நற்செயல்
கற்றவரு மேத்துங் கனிவுசால் நல்லுரை
பெற்றுயர்ந்தாய் நின்புகழே பேறு,

இல்லக் கிழத்தி இரத்தின ஈஸ்வரி
நல்லியன் மென்மொழி நானிலத்தில் – கல்லுங்
கனிவுறக் கண்ணீர்க் கடலில் அழுத்தி
தனிவுறல் காணுமோ சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போ டணைத்தென்னை யாட்கொண்டு போற்றி வந்த
இன்புருவாக் கேடரிய தெள்ளமுதே - துன்பறியா
வாழ்ந்த வளமார்ந்த நல்லின்பம் பொய்யாகித்
தாழ்ந்ததே ஐயோ சரிந்து,

குலம்விளக்கிக் கோவில் புகழ்நாட்டி நாட்டு
நலம்பெருக்கி வாழ்ந்த பெருநம்பி - புலம்பிநாம்
வாழ்ந்திடச் செய்தகன்று வானுல குற்றனையர்
ஆழ்ந்திருக்கு முள்ளத் தமிழ்ந்து

கல்வியறி வாற்றல் கனிவிலா சீர்வாழ்க்கை
சொல்லின்பத் தீந்தேன் சொரியன்பு - நல்லின்பு
மல்கிய மாண்புகூர் மாமதியே யுன்பிரிவு
நல்குதுய ராற்றேமே நாம்

புக்கவுடல் விட்டுப் புறம்போகு மிக்கலை
ஒக்கலுக்குங் காட்டுதல் ஒக்குமோ - தொக்கிருந்
துண்டு களித்த வுறவுகள் வாடாவே
புக்குருக்கு முன்னுட் புகைந்து.

பாரிற் பிறந்து பழவினை துய்த்தகலை
நேரிதே ஆறிட நேர்விரிவாற் - சோர்வுறன்
நன்றன்று நானில வாழ்க்கை கடிப்பெனப்
பன்னுமே மெய்ந்நூல் பரிந்து

இற்றழி கந்த லினியுடுக்க வொல்லாதான்
மற்றொன்று தன்னியல்பே மாற்றல்போற் - பெற்றவுடல்
விட்டொழியப் பற்றறுத்து வீடுபெறு மன்னுயிர்
ஒட்டிமுட லாமேழற்க வுற்று.

ஆசிரியர் பொ. கந்தையா
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத நண்பர்

—*—

புசல்லாவ தோட்ட நிர்வாகியாக ஏறத்தாள முப்பத்தைந்து ஆண்டுகள் பணியாற்றிய அமரர் திரு இராமஜெயம் அவர்களின் மறைவு தோட்ட நிர்வாகத்திற்கு மட்டுமல்ல தோட்டத் தொழிலாளர்கள், தோட்டப் பணியாளர்கள், கிராமப்புற மக்கள் எல்லோருக்குமே ஒரு பேரிழப்பாகும். தோட்டத்தை நிர்வகிப்பதிலும் திறமையாகவும் தொழிலாளர்களை வழிநடத்துவதில் அன்பாகவும் பண்பாகவும் நடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக செயலாற்றிய அமரர் இராமஜெயத்தை மக்களால் மறக்கமுடியாது.

எந்த சமயத்தில் எந்தரூபத்தில் துன்பங்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளித்து தொழிலாளர்களுக்கு தன்னால் இயன்ற நன்மைகளைச் செய்ய அவர் மறக்கவேயில்லை. அந்த நல்லவரால் வாழ்ந்தவர்கள் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பலர் தமிழ் சிங்கள மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தவர். வளர்க்க இறுதிவரை பணியாற்றியதை மறக்கமுடியாது.

அமரர் இராமஜெயத்தை பிரிந்து வாடும் சகோதரி திருமதி இராமஜெயத்திற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

எம். இராகவன்
மஸ்கெலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

—— O ——

திரு திருவம்பலம் ராமஜெயத்தின் இவ்வுலக வாழ்வு முற்றியதையிட்டு அவரது பிரிவைத் தாங்கிக்கொள்ளமுடியாமல் அவரது மனைவி, சகோதரர், மற்றும் உறவினர். அவரால் முன்னேற்றப்பட்ட பிள்ளைகள். கிராம மக்கள் தோட்டப் பங்காளர் தோட்ட ஊழியர்கள், இன்னும் அவரைச் சார்ந்தவர்களும் அவருடன் அன்புடன் பழகியவர்களும் மனம் வருந்துகின்றனர்.

ஒருவர் வாழ்வு முற்றும் போது அவரது செயல்களையே சீர்தூக்கி மக்கள் ஆராய்வார்கள். இவரது வாழ்வை பார்க்கும் போது இளமையிலேயே அன்புடனும், பண்புடனும் நல்லொழுக்கமுடைய கெட்டித்தனமுள்ள மாணுக்கனுக இருந்து குடும்பத்தில் குடும்பப் பெரியார்கள் புத்திக்கேற்ப நடந்தும், கல்வியில் சித்திபெற்று இவரது பெரியதகப்பனுர் மாரிமுத்து கனகசபாபதி மைத்துனர் திரு வெற்றிவேலு மார்க்கண்டு அவர்கள் நடாத்தி வந்த மடக்கும்பரை தோட்டத்தில் சிறப்பாகக் கடமை புரிந்து, அவர்கள் புத்திக்கேற்ப நடந்தும் இன்னும் திறமையான தோட்ட மேற்பார்வையிட்டு நடாத்தும் முறைகளை மேல்நாட்டு கல்வி முறைப்படி கற்றும் வந்துள்ளார். திருவாளர்கள் கனகசபாபதி மார்க்கண்டு அவர்கள் காலமானதும் இவரே தோட்டப் பொறுப்பை கையேற்று தோட்ட முகாமையாளர் மெச்சும்படியான முறையில் தோட்டத்தை பரிபாலித்துள்ளார். சில காலத்துக்குப்பின், வேறு தோட்டத்தில் பரிபாலனத்தை ஏற்றும பின் தனது அன்புக்குரிய புசத்தனைத் தோட்ட உரிமையாளர்கள் நலன் கருதியே தான் பணிபுரிந்த தோட்டத்தில் இருந்து இளைப்பாறியும், புசத்தனைத் தோட்டத்தின் மேற்பார்வையை பொறுப்பேற்று தான் கற்ற கல்வி, அனுபவத்துடன் தோட்டத்தை முன்னேற்றி உள்ளத்தெழுந்த மேலோங்கிய எண்ணத்தினுல் மற்றவர்களுக்கு பயன்பட வாழவேண்டுமெனவும் கருதி இக் கிராம மக்களின் கல்வி கற்ற இளைஞர்கள் பலரையும் இத்தோட்டத்தில் வேலைக்கமர்த்தி தோட்ட முறைகளையும் அவர்களுக்கு கற்பித்துக் கொடுத்து, அவர்கள் முன்னேறும் வழிவகைகளையும் வகுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது மாமன் மகளை விவாகஞ் செய்தும், தனது குடும்பத்தில் சகோதரரின் பிள்ளைகளையும், இனத்தவர்கள் பிள்ளைகளையும், சார்ந்தவர் பிள்ளைகள் எல்லோரையும், தனது பிள்ளைகளெனவே கருதி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டு மென்னும எண்ணத்துடனே அன்பாகப்பழகி இதில் இன்பம் கண்டுள்ளார்.

இவர் இளமையில் தகப்பனாரை இழந்தவராயிருந்து மாதாவைத் தெய்வமாகக் கருதி, உறவினர்களுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்கள் நல் எண்ணத்தையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ளார். இவர், நம்பிக்கை வைத்த தோட்ட உரிமை யாளர்கள் மதிப்பையும் அன்பையும் பெற்றுள்ளார்.

இவரின் வாழ்வில் இவரது துணைவியார் சேர்ந்து நற் செயல்களில் ஈடுபட்டும், நற் கைங்கரியங்கள் செய்தும், தெய்வ அனுக்கிரகம் பெற்று வாழ்ந்தார் என்றே கருதவேண்டி உள்ளது.

பிரிவு துன்பத்தைக் கொடுத்த போதிலும், இவரது துணைவியாருக்கும், சகோதரருக்கும் இனபந்துகள் சார்ந்தவர் களுக்கும் இவரது வாழ்வு பிறருக்கு பயன்பட்டதும், பண்பும், அன்புமுள்ள நல்வாழ்வாக இருந்ததைப்பற்றிய திருப்தி சாந்தமளிக்க வேண்டும்.

இவ்வுலக வாழ்க்கை செயல்களை தொடர்ந்தே மறு உலக ஆனந்தம் என்பது கருத்து. இக் கருத்திற்கேற்ப இவரது ஆன்மா சாந்தியடையும் என்பது வெளியாகின்றது. ஆகவே இவரது ஆன்மா சிவபதமடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீ நிலையம்,
சித்தன்கேணி.

எம். கே. சுப்பிரமணியம்
சட்டத்தரணி



# இன்முகம் காட்டும் இனியவர்

சீரும் சிறப்பும் பொருந்தியவூர் சித்தன்கேணி. அறி வாளரும் ஆற்றல்படைத்தவரும் மலிந்தவூர் சித்தன்கேணி. பண்பாலும் அன்பாலும் உயர்ந்தவூர் சித்தன்கேணி. அமை திக்கும் அடக்கத்திற்கும் சிறந்தவூர் சித்தன்கேணி.

இப் பெரும்பதியிலே திருவம்பலம் சிதம்பரம் தம்பதிக ட்கு இருகண்மணிபோல் இருதிருக்குமாரர்கள் பிறந்தார்கள். மூத்தவர் பெயர் சிவமயம். இளையவர் பெயர் இராமஜயம். வைகுசன் போல் விளங்கிய இருபுதல்வர்கள் கல்வி கேள்வி களிலே வல்லவராகத் திகழ்ந்து வந்தார்கள். இணைபிரியாச் சகோதரர்களில் இளையவராகிய இராமஜயம் இலங்கையின் எழில் கொஞ்சும் மலைநாட்டின் புசல்லாவை எனுமிடத்தில் தேயிலைத் தோட்டத்தில் தோட்ட அதிகாரியாய் வள்ளற் பெருந்தகையாய், உள்ளத்தால் உயர்ந்தவராய், உறுதுணைக் குரியவராய் பல்லோர்புகழப் பாங்குடன் விளங்கினர்.

விளங்குங்காலை "பாயிற் படுக்காமல் பத்துநாள் செல்லா மல் மாயக்கடதாசி மடிமேல் விழுந்ததென்ன" என்று சொல் வதுபோல் திடீரென மார்புநோய் மூலமாகக் காலன் அவரிடம் வந்தான். கவர்ந்தான் அவர் உயிரை காலனால் பறிக்கப்பட்ட அக்கனவான் உயிர் சங்காகரனின் அடிக்கமலம் சேர்ந்தது: அமரத்துவம் எய்தினர் இராமஜயம் என்று கேள்விப்பட்ட போது அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள், உற்றார் உற வினர் கதறி அழுதனர். கண்ணீர் விட்டனர். கண்ணீர் விடு வதற்கும் காரணம் உளது.

இவரது பொன்மேனி, மகிழ்ச்சி ததும்பும் சிரிப்பு, மலர்ந்த முகம்; மாசற்ற மனம், கவர்ச்சியான தோற்றம். கண்ணைக் கவரும் நடை. கனிவான வார்த்தை. முன்மாதிரித் திட்டம் செயலாக்கும் செய்கை. அள்ளிக் கொடுக்கும் கைகள். இவற்றினை எண்ணினால் கண்ணீர் விடாமல் இருக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவதில்லை. இந்தக் காயமே பொய். இது வெறும் காற்றடைத்த பை. ஆதலால் சோடியிழந்த அன்றில் போல் துயருறும் அன்னாரது மனைவிக்கும் குசனை இழந்த லவன் போல் துடிக்கும் சகோதரன் சிவமயத்திற்கும் பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதல் சொல்வது யாமல்ல. ஆண்டவன் தான் ஆறுதலையும், அமைதியையும் அருள்பாலிக்க வேண்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பன்
பிரசங்க பூஷணம்
சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி

---

# ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபை

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபரும், சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபைத் தலைவருமாகிய திரு க. அருணாசலம் அவர்களின் அனுதாபச் செய்தி**

# திரு இராமஜெயம் அவர்கள்

விடுதலைக்காலத்தில் இந்தியா சென்று வீடு திரும்பியதும் திரு இராமஜெயம் அவர்களின் மறைவை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அவரது மறைவு சித்தன்கேணி வாழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அவரது மாசற்ற உள்ளமும், சிறந்த பண்புகளும் எல்லோரையும் அவர்பால இழுத்தது. அவரது நற்பண்புகள் அவரது வாழ்வில் சிறப்புச் செய்ததுடன் செய் தொழில் வெற்றிபெற உதவின. வெற்றியின் உச்சியை அடைந்தபின்பு மற்றவர்களுக்கு சேவை புரியும் வாழ்க்கையை மேற்

கொண்டார். அவர் நடுவூர்ப் பழுத்த நன்மரம்போல தன் வெற்றியின் விளைவுகளை ஏனைய சுற்றத்தவருடன் பகிர்ந்து கொண்டார்.

சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையாரில் மிகுந்த பற்றுடையவராய் காலத்துக்குக் காலம் அக்கோயிலுக்குப் பல தொண்டுகளைச் செய்தார். அவரது புசத்தவ தோட்டத்தில் இருக்கும் சித்தன்கேணி மக்கள் மாதா மாதம் கோவிலுக்கு ரூபாய் 250/- அன்பளிப்பு செய்து வருகிறார்கள். கோவில் மின்னிணைப்பினால் வரும் செலவை அவரும் அவரது குடும்பத்தினரும் ஏற்றுக்கொண்டார்கள். இன்னும் பொதுநல தாபனங்களுக்கும் கல்வி தாபனங்களுக்கும் தனது செல்வத்தை வரையாது கொடுத்தார். நான் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபராய் இருந்தபொழுது அக்கல்லூரிக்கு விளையாட்டுமைதானம் பெற நடாத்திய பொருட்காட்சிக்கு பேராதரவு தந்தார். விக்ரோறியாக் கல்லூரி சைவப் பெரியார் சிவபாகசுந்தரத்தின் நூற்றாண்டு சபையும் அவரது ஆதரவைப் பெற்றது. இதனைவிட அவர் மற்றவர் நலனில் காட்டிய ஆர்வம் மெச்சத்தக்கது. அநுபவ வாயிலின்று அவர் கூறிய அறிவுரைகள் பலரை வாழ்க்கையில் உயர்த்திற்று. முக்கியமாக இளைஞர்களை வழி நடத்துவதில் பேரார்வம் காட்டினார்.

அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரை நன்கு அறிந்திருந்த எம்முள்ளங்களில் அவரது நினைவு என்றும் பசுமையுடன் நிலவும்.

சித்தன்கேணி க. அருணாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN APPRECIATION

Mr. Ramajayam is no more. It is sad to think that we will no longer have the friendly personality amongst us or hear the cheerful Greetings as he comes into the Y. W. C. A. Guest House.

He considered they Y. W. C, A., as his second home and enjoyed staying with us.

He was a friend we are sorry to lose. He gave us every support in all our activities, with generous donation good advice and in many other ways.

He was more or less a santa claus at X' mas time. Over the years he supplied all departments with X' mas Trees and gifts to many staff members of the Guest House.

Humility was his outstanding virtue and he had a high sence of concern for those who served him.

We extend our Deepest Sympathy to his wife and to his family.

MAY HIS SOUL REST IN PEACE

(REGUIESCAT IN PEACE)

THE GUEST HOUSE.

*17th. September 1982* Y. W. C. A. COLOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කේ. ඇම්. කිරිබංඩා
හිමපු සාම විනිසුරු හා,
ගම්සභා නියෝජිත,
සමරකෝන්නැහේන,
පන්විල තැන්න.

චරිතයෙන් බිඳක් ..........................................................................

ගම්පොල පුස්සේතැන්න වතුයායේ වතු අධිකාරව සිටි පී. රාමජේසම්.

මහතා පරලොව සැපත්වී අදට මසක් ගතවණ මේ මොහොතේ ඒ මහතා ගේ ජීවන චරිතය අලලා පලකරන ලබන චරිතාංගය වෙනුවෙන් පණිවිඩයක් නිකුත් කිරිමට ලැබීම සතුටට හෙතුවකි.

මෙම වතුයාය අවට ඇති ගම්වැසි ජනතාවට දුප්පත්. පොහොසත්. භේදදීයෙන් තොරව ජාති භේදදියෙන් තොරව දූ කේදිත් සැපතේදිත් පිහිට වෙමින් විශාල කම්කරු ජනතාවකගේ කුසගින්න නිවාලු අවංක ක්‍රියාගුරු මහත්මා ගතිගුණවලින් හෙබි මහත් මයෙක් අපට නැතිවිම දුකකි පාඩුවකි.

අප අතරින් සදිහටම වෙන්වූ ඒ මහතාට නිවන් සුව පතමි.

මේ ගම්වාසීන් වෙනුවෙන්
කේ. ඇම්. කිරිබංඩා, *J. P.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தின் தமிழாக்கம்

கே. எம். கிரிபண்டா
சமாதான நீதவானும்
கிராம சபை முகவரும்
சமரக்கோணஹேன,
பன்வில தன்ன,

# இதயச் சுடரே.........

கம்பளை புஸ்ஸெதன்ன தோட்டத்தில் தோட்ட முகாமையாளராகக் கடமையாற்றிய திரு ரீ. இராமஜயம் இவ்வுலகை நீத்து இன்றுடன் ஒரு மாதம் முடிவடையும் இவ் வேளையில் அவரது வாழ்க்கைச் சரித்திரத்தையொட்டி வெளியிடப்படும் சரிதையின் பொருட்டு தகவல் தரும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுச் சந்தோஷமடைகின்றேன்.

இத்தோட்டத்திலுள்ள கிராமவாசிகள் மத்தியில் ஏழை பணக்காரர் என்ற பேதமின்றி, ஜாதி, மத பேதமின்றி, சுக துக்கங்கள் அனைத்திலும் பங்குபற்றி, பாரிய தொழிலாளர் கூட்டம் பகையின்றி வாழச் செயலாற்றிய சிறந்த குணாதிசயங்களைக் கொண்ட இவர் இறந்தமை எங்களுக்கோர் பேரிழப்பும் பெருந்துக்கமுமாகும்.

இவ்வுலகை நீத்து நிரந்தரமாக எங்கள் அனைவரையும் விட்டுப் பிரிந்த பெரியாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

கிராம வாசிகளின் பொருட்டு
கே. எம். கிரிபண்டா J. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகாப்தம் ஒன்று முடிவுற்றதே

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கம்பளை புசத்தலைத் தோட்டத்தில் கடைசிவரை வசித்தவருமான காலஞ் சென்ற திரு சிற்றம்பலம் இராமஜெயம் அவர்கள் தோட்ட ஊழியர்களின் வளர்ச்சிக்காகவும், குடும்பநண்பர்களின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்து வந்தார். திரு இராமஜெயம் அவர்கள் தனது இளம் வயதிலே மலைநாட்டுக்கு வருகைதந்து டெஸ்பட்டி (Dessford) தோட்டத்தில் உதவி லிகிதராக சேர்ந்து பின்பு மடக்கொம்பர (Meddacombra) தோட்டத்தில் லிகிதராக கடமை புரியும் காலத்திலே புசத்தலைத் தோட்டத்தின் மேற்பார்வையாளராகவும் இருந்து வந்தார். பின்பு 1964ம் ஆண்டு லிகிதர் பதவியை விட்டு விலகி நிரந்தரமாக இறக்கும் வரை புசத்தலைத் தோட்டத்தினை தனது நிர்வாகத்தின் கீழ் பார்ப்போர் கண்டு வியக்கும் வண்ணம் தனது கடும் உழைப்பின் மூலம் எழுச்சி பெறச் செய்து புசத்தலை என்ற சொல்லினை சகலரது நாவினிலும் திகழவைத்தார்.

திரு இராமஜெயம் அவர்கள் தனது நிர்வாக காலத்தில் தனது சிறந்த சேவையாலும், நிறைந்த உள்ளத்தாலும், பரந்த அறிவாலும் எல்லோர் உள்ளத்தையும் இன மத பேதமின்றி கொள்ளை கொண்டு பழுத்தபழமாக - நிறைகுடமாக பண்பின் உறைவிடமாக தோட்ட உத்தியோகத்தர்கள் தொழிலாளர்கள் மற்றும் கம்பளை, கண்டி, கொழும்பு வாழ் சிங்கள, முஸ்லீம், தமிழ் மக்களினதும் ஏற்றுதலுக்கும், போற்றுதலுக்கும் இலக்காகி தோட்டத்தினை சிறந்த முறையில் நிர்வகித்து வந்தார்.

திரு இராமஜெயம் அவர்களின் நிர்வாகத்திறனை ஆழ்ந்த அறிவை அறிவால் விளைந்த பணிவை பணிவுடன் இணைந்த இன்சொல்லை இனிமையுடன் கூடிய தெளிவை, தெளிவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமான தூய சிந்தனையை, அன்பு நெஞ்சத்தை இனி என்று காண்போம். திரு இராமஜெயம் அவர்களின் இழப்பு அவரது குடும்பத்திற்கு மாத்திரமல்ல புசல்லாவைத் தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், இப்பகுதி சகல மக்களுக்கும் ஏற்பட்ட பெரிய இழப்பாகும்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

புசல்லாவைத் தோட்ட உத்தியோகத்தர்கள்
02-09-1982

---

உ
சிவமயம்

திருகோணமலை,
20-08-82

ஸ்ரீ ராமஜெயப் பிரியாகச் சமர்ப்பணம்;

எம் இனம் வாழ வாழ்ந்த பிரான் ஜெயி - ஸ்ரீ ராமஜெயம்
தன் ஆன்மநிலம் சென்றடைந்தார் ஜெயி - ஸ்ரீ ராமஜெயம்
எம் குலக்குமுற எய்தினர் பதம் ஜெயி - ஸ்ரீ ராமஜெயம்
தம் அருள்ஓங்க ஐயமானர் ஜயம் ஜெயி - ஸ்ரீ ராமஜெயம்

எமது உற்றார், உறவினருடன் கூடி
ஸ்ரீ ராமஜெய ஆத்ம - பரமாத்ம சங்கமப் பிரியுடன்

உங்கள் பேரன்பு

வை. சுந்தரராசா

வாழ்க எங்கள் இதய ஜோதி!
ஸ்ரீராமஜெயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Appreciation

## Mr T. RAMAJEYAM

A welcome smile, a cheerful face and a readiness to help people in distress had been the remarkable traits of Mr T. Ramajeyam who passed away on the 18th of August at the intensive care unit of the General Hospital Colombo

He was "uncle" to all those who knew him well and liked to call everyone by that most amiable term son

He was associated with the tea industry for nearly five decades and the void created by his demise can never be bridged.

He was a devout Hindu and a disciple of Swami MAHARAJ SIVABALAYOGI.

A philanthropist par excellance, he could have chosen a life of leisure comfort and luxury but he preferred to toil till he was called to his eternal rest.

The large crowds from various walks of life which thronged to pay homage to him at A F. Raymonds' funeral parlour in Colombo, then at his residence at Pussetenne Estate, Gampola and then his home at Sithankerny bear testimony to his lovable qualities.

May the turf lie lightly on him.

**Friends & Admirers**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Late Mr T. RAMAJAYAM

Today is the 31st day of the passing away of our beloved "Brother" T Ramajayam He has endeared himself to all those with whom he had come in contact. Like Tharumar of Maha Bharata fame, our "Brother" had always been ready to assist the needy - the word "NO" is foreign to him He was a beacon light in the otherwise dark firmament to many.

My first contact with him was during the forties when he was in the Meddecumbura Estate Watagoda At that time he was living with his mother - a towering authoritarian personality She used to relate many incidents of by - gone years experienced not only by her but also by their forbears when they first came upcountry during the coffee plantation days.

Whilst working in the Meddecumbra Estate itself our "Brother" started to superintend the work at Pussetenne Estate, Gampola. He was a tireless, indefatigable ane determined worker His activities in those days permitted him to get home only long after midnight Still he was always punctual to Office in the morning. He was an exemplary officer loyal to the Establishment and won the affection of his Superiors.

In later years when he took full charge of Pussetenne Estate, he was equally unremitting in his efforts to make it one of the best Estates in the District In the process, he was not unmindful of the needs and welfare of the workers under him. Unlike other Capitalists, he looked after their interests and encouraged their upliftment. He also maintained a cordial relationship with the surrounding villages.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In his social and cultural activities his noble partner was a tower of strength to him. Though born and bred in Malaysia, her parents also hailed from Sithankerny. Even before marriage she was related to our departed "Brother." She looked after him tenderly through thick and thin. To her his demise is a very very big blow - she is left alone, high and dry, sans children, sans kith and kin.

Throughout his career our dear "Brother" was of immense source of strengt to his own brother Sivamayam aud his children. He looked after them all dearly. Among the latter, he took a special interest in nephew Skandamayam, brought him to Pussetenne and trained him in all aspects of Estate Management under his personal supervision, so much so, today Skadamayam is in a position to run the Estate.

As mentioned earlier our departed "Brother" had the welfare of all at heart - many a needy looked up to him hopefully for succour and he had not failed them. He was deeply religious thought not a frequent templegoer, However he had not failed in pilgrimages often to renowned temples, both here and in India.

May his soul released from samsara rest in eternal Bliss and eternal Glory at the feet of ISWARA.

*V. Rasalingam*
110 Manning Place,
Wellawatte,
Colombo-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தேசிய சங்கம்
# The National Union of Workes

618-3/3 Galle Road,
T'Phone: 88538 COLOMBO 3


1982, செப்டம்பர். 6

காலஞ்சென்ற நண்பர் திரு ரி. ராமஜெயம் அவர்கள் எனக்கு பல ஆண்டுகளாக தெரிந்தவர், அவரை அடிக்கடி நான் சந்திக்காதிருந்தபோதிலும் எங்களது அன்புந் தொடர அதிக ஆழமாகவே இருந்தது. இது பழக்கத்தால் மாத்திரம் வந்த பிணைப்பு அல்ல. அவரது சிரிய குணங்களே இதற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

நாகரீகம், பண்பு, மனிதாபிமானம் என்பன பற்றி நூல்களிலும், பேச்சுக்களிலும் கேட்டிருக்கின்றோம், ஆனால் அதை செயல்முறையில் நடத்திக் காட்டிய சிலரில் காலஞ்சென்ற ரி. ராமஜெயம் அவர்களும் ஒருவர் என்பதில் நான் பெருமை அடைகின்றேன்.

தூய்மையான வாழ்க்கை அவருக்கு சொந்தமாக இருந்தது. நம்பிக்கை என்னும் வார்த்தைக்கு புது உயிரும் பிரகாசமும் கொடுத்தவர் அவர். இவரின் கடைசி யாத்திரை பின்போது அவரது நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் தலைவணக்கம் செயததிலிருந்து அவரின் பெருமையை நாம் தெரிந்துகொள்கிறோம்

அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

ஸி. வி. வேலுப்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAMAKRISHNA MISSION
BATTICALOA

# ஏழைகள் பங்காளன்

திருவாளர் T. ராமஜெயம், புசத்தனைத் தோட்டம், கம்பளை அவர்கள் சிவபதம் எய்திய செய்தி நான் கொழும்பில் நிற்கும் சமயம் அன்பர் ஒருவரால் எனக்கு தெரிவிக்கப்பட்டது. இச்செய்தி எனக்கு ஓர் அதிர்ச்சியை உண்டாக்கியது. அமரர் T. ராமஜயம் அவர்களுடன் நான் குறித்துக் கூறும் அளவிற்கு பழகும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் அவர் என் உள்ளத்தைக் கவர்ந்த மெய்யன்பராயிருந்தனர் காட்சிக்கு எளிய தோற்றமுடையவர், மென்மையாகப் பேசும் இயல்பினர் இனிய சுபாவம் படைத்தவர். கஷ்ட நஷ்டத்தையும், சந்தோஷத்தையும் இலாபத்தையும் சமநோக்குடன் பார்க்கும் பண்பாளர். தனக்கு ஏற்படும் இன்னல்களைப் புன்சிரிப்புடன் தாங்கும் தகமையினர். நல்லோரிணக்கத்தை நாடும் இயல்பினர்.

மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மேற் கொண்டுள்ள மன்னுயிர்ச் சேவை சிறந்து விளங்க வேண்டும் என்ற பேரெண்ணம் படைத்தவர். நாம் அன்னாரினுடைய உதவியை நாடிய போதெல்லாம் செல்வத்தினை வாரி வழங்கிய வள்ளல். எம்மைப் பொறுத்தவரையில் அன்னாரின் மறைவு ஈடு இணையற்ற பேரிழப்பாகும்.

"வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்
வினை தானகன்றால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்"

என்பதனை நம் அனைவருக்கும் உணரவைத்து விண்ணுலகு எய்திவிட்டனர், அன்னாரின் ஆத்மா எம்பிரானின் குஞ்சித பாதங்களின்கீழ் நித்திய சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சுவாமி ஜீவனனந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பளை இந்து சங்கம்

காப்பாளர்:- திரு வி. குமாரசாமி (மாவட்ட நீதவான்)
தலைவர்:- திரு கே. பி. பெரியசாமி
செயலாளர்:- திரு எம். பி. கணேஷ்
பொருளாளர்;- திரு ஏ. பெரியசாமி

84 அம்பகமுவ வீதி,
கம்பளை

# நினைவு அஞ்சலி

"சிவமெனும் நாமத்தைச் சிந்தையி லடக்கி
நமவெனும் நாமத்தை நாவினிலேந்திட
பவமது தானும் பாவம் அகலும்
சிவபத மடைவது நிச்சயம் தானே"

அமரர் சித்தன்கேணி திரு T. ராமஜெயத்தின் மறைவு மலையகப் பகுதி மக்களுக்கு பெருந் துயரத்தையும், கஷ்டத்தையும் ஏற்படுத்தியது. அன்னாரது வாழ்வு தொடர்ந்து 40 வருடகாலமாக சமூக சேவைச் சின்னமாகப் பிரகாசித்தது. "இல்லை" என்னும் வார்த்தை அவரது வாயால் வருவது அரிதிலும் அரிது. ஈகை என்பதே அவரது வாழ்க்கையின் குறிக்கோள். தானமும், தர்மமும், சமயப் பணிகளும் நிறையச் செய்துள்ளார் என்பது மலையகத்தோர் நன்கறிவர். அவரது முகம் வரவேற்கும் முகம். அவரது கரங்கள் கொடை வழங்கவே தோன்றின. இன மத பேதமன்றி உயர்வு தாழ்வென வித்தியாசம் பாராது தனது சேவையை செய்து வந்தார். இத்தகைய பிறவியை மனித சமுதாயத்தில் பார்ப்பதரிது.

அவரது குடும்பத்தார்கள் அவருடன் பக்கபலமாக நின்று தொண்டாற்றியிருக்கின்றார்கள். இதை நிரூபிக்க அன்னாரிடன் சடலத்திற்கு ஆயிரக்கணக்கில் புசத்தலை தோட்டத்தில் உள்ள மக்களும் ஏனையோரும் 19-8-82 ல் அஞ்சலி செலுத்திய முறைகளை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது. அன்னார் ராமகிருஷ்ண மிஷன் (மட்டக்களப்பு) மடத்துடன் மிக தொடர்பு உடையவர். மிஷன் பணிகளில் மிக ஊக்கம் உடையவர். அவரால் நிகழ்த்திய உதவிகள் மிகவும் போற்றத்தக்கன. இறைவனை சேவிப்பதே பிறவியின் காரணம். அன்னாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை சித்தி நிலைத் தோருக்கு ஒப்பிடலாம், அன்னாரின் பணிகளைத் தொடர்ந்து புரிய அவரது குடும்பத்தாருக்கு எம் பெருமான் எல்லா வசதிகளையும் கொடுத்து அருள் புரிவாராக,

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை மிகப் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

அன்பேசிவம்
கா. பெ. பெரியசாமி

---

# KAMALAJI & CO.,

9, Ambegamuwa Road,

**GAMPOLA.**

**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பெற்ற**
**T. ராமஜெயம் ஐயா அவர்களே!**

ஐயா! எங்களை மீளாத் துயரில் விட்டு சென்ற உங்களை என்றும் மறவோம்.

ஐயா! உங்களிடம் பழகிக் கடந்த இனிய நாட்களை, எங்களது எஞ்சிய நாட்களில் நினைவு கூறுவோம்.

ஐயா! எங்களிடம் அன்புகாட்டி. அறிவுரை வழங்கி. ஆசி கூறி வழிநடத்திச் சென்றீர்கள். இவ் வழியில் என்றும் செல்வோம்,

ஐயா எங்கள் குடும்பத்தில் ஒருவராக சுகதுக்கங்களில் பங்குகொண்டு எங்களுக்குச் செய்த அளப்பரிய உதவிகளுக்கு என்றும் நன்றி கூறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா! தனக்கென வாழாத பெருந்தகையே! கடந்த 50 ஆண்டுகளுக்குமேல் மலையக தோட்டப் பகுதியில் வாழ்ந்து தோட்டத் தொழிலாளருக்கும், உத்தியோகத்தர்களுக்கும் அன்புபெற்ற இனிய நண்பர்களுக்கும் பிரதி உபகாரம் கருதாது செய்த பேருதவிதனை என்றும் அவர்கள் மறக்கமாட்டார்கள்.

ஐயா தங்களுக்குக் காட்டிய அன்பையும் பெருமதிப்பையும் பெருமைக்குரிய அம்மா அவர்கட்கு என்றும் காட்டுவோம்.

ஐயா விட்டுச்சென்ற நற்பணிகளை தொடர்ந்து செய்ய அம்மா அவர்கட்கு ஆண்டவன் ஆற்றலை கொடுக்கட்டும்.

ஐயா நீங்கள் நடாத்திச் சென்ற தொழிலிலே நாங்கள் காட்டிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் உங்களுக்குப் பின் நடாத்திச் செல்பவர்களுக்கு என்றும் நல்குவோம்.

ஐயா அவர்கள் எங்களுடன் இல்லையே என்ற ஏக்கம் தீருமா?

ஐயா அவர்களின் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

ஐயா அவர்களின் திருநாமமாகிய ராமஜெயத்தை நாளும் பொழுதும் நாக்கூற ஜெயம் உண்டாக அருள்வீர்களாக.

ஐயா அவர்களின் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்.

உற்ற நண்பரை, உயர்ந்த ஆசானை பிரிந்த

மயில்வாகனம் குடும்பம்
செல்வராஜா குடும்பம்
கமலாஜி & Co.
கம்பளை



எதிர்க்கட்சி முதல்வர் அலுவலகம்
பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே

# நெஞ்சத்தால் நீங்காதவர்

திரு இராமஜெயம் அவர்களது திடீர் மறைவு அவரை அறிந்தவர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அவருடைய புன்முறுவல் பூத்த முகமும், இனிய பேச்சும், சிறந்த விருந்தோம்பும் பண்பும், தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாக வாழ்ந்த பாங்கும் எவருடைய சிந்தையையும் விட்டு நீங்காத தன்மை படைத்தவை.

சிறந்த கடவுள் பக்தியும், நேர்மையும், அன்பும் அவருடைய பிறவிக்குணங்களாக அமைந்திருந்தன. அவருக்குப் புத்திரபாக்கியம் இல்லாவிட்டாலும் அவருடைய பிள்ளைகளைப்போல் அவரால் வாழ்வளிக்கப்பட்டவர்கள் பலர். அவருடைய பரோபகார செயல்களுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து உதவிபுரிந்தவர் அவருடைய அருமைத் துணைவியாராவர். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்த அந்த அம்மையார் இன்று தமது கணவனை இழந்து விதவைக்கோலத்தில் நிற்பது அவருடைய சிரிய வாழ்க்கை அறிந்தோர் எல்லோருக்கும் ஆழ்ந்த கவலையை அளிப்பதாகும்.

அவருடைய துணைவியாருக்கும், அவருடைய அன்புச் சகோதரர் திரு சிவமயம் அவர்களுக்கும் அவர் பெருச் செல்வங்களான பிள்ளைகள் அனைவருக்கும் என் மனைவி சார்பிலும் என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு இராமஜெயம் அவர்களது ஆத்மா சாந்தியடைவதாக

அ. அமிர்தலிங்கம்
எதிர்க்கட்சி முதல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு தி. இராமஜெயம்

ஆதி காலத்திலே சித்தர்கள் வாழ்ந்து புகழ் பெற்ற சித்தன்கேணி வாசியாகிய அமரர் திரு திருவம்பலத்திற்கும் தொல்புரம்குடி அமரர் திருவாட்டி சிதம்பரத்திற்கும் கனிஷ்ட புத்திரராகப் பிறந்த அமரர் இராமஜெயம், இளம் பராயத்தில் தொல்புரத்திலே வாழ்ந்து வந்தார். இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரியிலும் கல்விகற்று, மலைநாட்டிற்குச் சென்று, அங்குதன் சொந்த முயற்சியினால் மிகவிரைவில் முன்னேற்றமடைந்தார். இவர் தகப்பனார் இளமையில் விண்ணுலகெய்தினமையினால் இவரின் பெரிய தகப்பனார் அமரர் கனகசபாபதி அவர்கள் பலவழியிலும் உதவி புரிந்து வந்துள்ளார். இவரது சிறந்த வாழ்க்கையைத் தாயார் கண்டு உவகை பூத்ததுண்டு.

கடவுளாற் கொடுக்கப்பட்ட செல்வமனைத்தும் சிவன் தந்த நம்பிக்கைச் சொத்தென்ற முறையில் வாழ்க்கை நடத்திப் பிறருக்கு உள்ளன்போடு உதவி செய்வதே தன் குறிக்கோளாகக் கொண்டார். தன் சகோதரரின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் போல் பேணிப்பாதுகாத்து வளர்த்து வந்தார். எங்கள் யூனியன் கல்லூரிப் பிள்ளைகள் அகில இலங்கைச் சுற்றுலா நடத்தும் பொழுது இவருடைய கம்பனித் தோட்டத்தில் தங்கிய தருணங்களில் இவருடைய விருந்துபசாரத்தை மிகமிக வியந்ததுண்டு. எனது ஆசிரியர்கள் இவ்வுபசாரத்தைப்பற்றி புகழ்ந்த பொழுது எனது மனம் பூரித்ததுண்டு.

கடைசிமுறையாக இவரை இவரது சகோதரரின் மகனின் விவாகத்தன்று சந்தித்த போது, தான் சில காலத்தின் பின் யாழ்ப்பாணத்தில் வந்து வசிக்கும் நோக்கமுண்டென்றும் கூறிய போது, எம்போன்றோருக்கு இது மிக மகிழ்ச்சியான செய்தியாயிருந்தது. இவர் கல்விகற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் முன்னை நாள் அதிபர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரத்தின் நூற்றாண்டு விழா 1978இல் நடந்தபொழுது முழு மனத்துடன் தன் சகோதரர் மூலம் உதவிசெய்தார்.

இப் பெரியார் தனது ஆத்மீக முன்னேற்றத்திற்குத், தனது வாழ்க்கையின் சகல துறைகளிலும் உழைத்து வந்துள்ளார். ஆகவே இவரது பிரிவால் துயருறும் இவரது பாரியாருக்கும், அண்ணருக்கும், பெரு மக்களுக்கும், சகலனுக்கும், எங்கள் குருநாதர் சிவயோக சுவாமிகளுடைய பொன் மொழிகளை நினைவூட்டுவதே ஆறுதல் அளிப்பதாகுக:-

"எப்பவோ முடிந்த காரியம்"
"ஒரு பொல்லாப்புமில்லை"
"நாம் அறியோம்"
"முழுவதும் உண்மை"

க. கிருஷ்ணபிள்ளை B. A. (Lond)
இளைப்பாறிய அதிபர்
உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் ந. சுப்பிரமணியம்
மூளை - நரம்பு சத்திரசிகிச்சை நிபுணர்

பன்னமூலை
10-09-1982

# தும்பிமுகன் தாளில் மன்னு!
# மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடுவீர்

**வெண்பா**

இன்ப முகம்மலர எம்மை வரவேற்றும்
அன்பு பொழிந்தும் அரவணைத்தும் - என்றும்
பிறர்க்கெனவே வாழ்ந்தும் இராமஜெயம்! பித்தன்
இறைவனடி சேர்ந்தார் இனிது

—<0>—

கன்னனென வாழ்ந்த கடமை புணர்வுடைய
மன்னு! மகிழ்ச்சியுடன் வாழ்ந்திடுவீர் - பன்னிநகை
எம்பெருமான் அண்ணன் எழில்சித்தன் கேணியுறை
தும்பிமுகன் தாளிற் தொடர்ந்து.

பன்னமூலை
டாக்டர் ந. சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாமாலை

## தேவாரம்

பிடியதன் உரிவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.

## திருத்தாண்டகம்

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
    மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்
    பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
    அகன்றா ளகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
    தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

## திருவாசகம்

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
    தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
    நீயலாற் பிறிது மற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
    திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
    யாருன்னை அறியகிற் பாரே

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
    னிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
    தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
    வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
    தொண்டனேன் பணியுமா பணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்
றேன்பெற்ற தார்பெறு வாருலகில்
ஊரு முலகுங் கழற
வுழறி யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் —அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை —கடிதேகு
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய —மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு —பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய —முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த —அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை —இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் —பெருமாளே

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரு மற்றும்உள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

## தாயுமானவர் பாடல்

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
வொளியாகி வெளியாகி உருவ மாகி
நன்றாகித் தீதாகி மற்று மாகி
நாசமுட னுற்பத்தி நண்ணு தாகி
இன்றாகி நாளையுமாய் மேலு மான
எந்தையே எம்மானே என்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதாவாகிக்
கடிதினில்வந் தருள்கூறுங் கருணை விண்ணே.

## இராமலிங்கர் பாடல்

ஒருமையுட னினது திருமலரடி நினைக்கின்ற
வுத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்து புறமொன்று
பேசுவா ருறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்
பெருநெறிபிடித் தொழுகவேண்டும்
மதமான பேய் பிடியா திருக்கவேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவேண்டும்
முனை மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வினான் வாழவேண்டும்.

## கந்தரலங்காரம்


நாள்என் செயும்வினை தான்என் செயும்எனை நாடிவந்த
கோள்என் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையுந் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே

## கந்தரநுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

ஓம் விநாயகர் முன்னிற்க வேலும் மயிலும் துணை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்.

சிவபதமடைந்த எமது குடும்பஜோதி

**திரு திருவம்பலம் இராமஜயம்** அவர்களது மரணச்சடங்கு வைபவங்களில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும், அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியங்களில் பங்குபற்றியவர்களுக்கும், இரங்கலுரைகள், இரங்கற் பாக்கள் தந்துதவியவர்களுக்கும் இன்னும் வர்த்தகத் தொழிலோடு அன்னாருடன் ஈடுபாடு கொண்ட பெருமக்களுக்கும் மலரை மலரச் செய்த சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி அவர்களுக்கும் மலரை வெளியிட உதவிய சங்கானைத் திருமொழி அச்சகத்தார்க்கும் மூத்த கணபதியை கைதொழுது எமது நன்றியினை நவிலுகின்றோம்,

இங்ஙனம்

**திருமதி இரத்தினேஸ்வரி இராமஜயம்**

**திரு திருமதி திருவம்பலம் சிவமயம்**

**திரு சி. ஸ்கந்தமயமும்**

**சகோதரர்களும்**

**உற்றார் உறவினர்களும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org